PRI-4
87
DIRECTOR OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ
24 AUG 2017
CHENNAI-600 015

ADRD (PKD)

சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – மானியக் கோரிக்கை அறிவிப்பு – ஊரக பகுதிகளில் உள்ள அரசு மற்றும் சமுதாய அமைப்பு கட்டடங்கள் மற்றும் வளாகங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் தூய்மையாக பராமரிக்க நடவடிக்கை எடுத்தல் – வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.4) துறை

அரசாணை (நிலை) எண். 93 நாள் 21.08.2017

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடித எண். 62880 / 2017 / பரா. 4–1, நாள் 09.08.2017

ஆணை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானியக் கோரிக்கை 21.06.2017 அன்று நடைபெற்றபோது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"ஊரகப் பகுதிகளிலுள்ள அரசு பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், பொது சுகாதார மையங்கள் சமுதாய நலக் கூடங்கள், கிராம ஊராட்சி சேவை மையங்கள், சுய உதவிக் குழுக் கட்டடங்கள் போன்ற சமுதாய உட்கட்டமைப்புகள் மற்றும் அரசு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேற்குறிப்பிட்ட பணிகளில் ஊராட்சி அமைப்புகள், அரசு/ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகிய அரசு அமைப்புகளில் பணிபுரியும் சுகாதார பணியாளர்கள், தூய்மை காவலர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியாளர்கள் மற்றும் மஸ்தூர்கள் ஈடுபடுத்தப்படுவர்"

3. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இப்பொருள் குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110ன் படி ஊரகப்பகுதிகளிலுள்ள தெருக்களை சுத்தம் செய்தல், குப்பை கூளங்களை அகற்றுதல், தேவையற்ற செடிகள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல் மற்றும் ஊரகப் பகுதிகளின் ஒட்டுமொத்த சுகாதார நிலையினை மேம்படுத்துதல் ஆகியவை ஊராட்சிகளின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும்.

எனவே, ஊரகப் பகுதிகளின் ஒட்டு மொத்த சுகாதார நிலையினை மேம்படுத்திட ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள அரசுப் பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், பொது சுகாதார மையங்கள், சமுதாய நலக் கூடங்கள், கிராம ஊராட்சி சேவை மையங்கள், சுயஉதவிக் குழுக் கட்டடங்கள் மற்றும் இதர அரசு கட்டடங்கள் மற்றும் அவை அமைந்துள்ள வளாகங்களை குறைந்தபட்சம் மாதமொருமுறை ஊராட்சி அமைப்புகள், அரசு / ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், பொது சுகாதார மையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்கள், மஸ்தூர்கள், மகாத்மா காந்தி தேசிய தேசிய ஊரக வேலை உறுதித்திட்டப் பணியாளர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப்

பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தூய்மைக் காவலர்கள் ஆகியோரைப் பயன்படுத்தி தூய்மைப் பணிகள் மேற்கொண்டு தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க ஊராட்சி நிர்வாகங்களை அறிவுறுத்தலாம்.

ஊராட்சி அமைப்புகள், அரசு / ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், பொது சுகாதார மையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் இதர அரசு அமைப்புகளில் பணிபுரியும் சுகாதார பணியாளர்கள், மஸ்தூர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப்பணியாளர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தூய்மைக் காவலர்கள் ஆகியோர் இப்பணியில் ஈடுபடுத்தப்படுவதால், ஏற்கனவே உள்ள திட்டங்களிலுள்ள நிதியினை பயன்படுத்தி தூய்மைப் பணிகளை மேற்கொள்ளலாம்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், ஊரகப் பகுதிகளில் அரசு மற்றும் சமுதாய அமைப்புக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் தூய்மையாக பராமரிப்பதற்கான வரைவு வழிகாட்டி நெறிமுறைகளை அனுப்பியுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள அரசு மற்றும் சமுதாய அமைப்புக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களில் மேற்கொள்ளப்படும் தூய்மை பணியினை, அனைத்து துறை அலுவலர்களையும் ஒருங்கிணைந்துச் செம்மையாகச் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்களை அறிவுறுத்திடவும், வரைவு வழிகாட்டி நெறிமுறைகளுக்கு ஒப்புதல் வழங்கி உரிய அரசாணை வெளியிடவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

6. ஊரகப் பகுதிகளிலுள்ள அரசு பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், பொது சுகாதார மையங்கள் சமுதாய நலக் கூடங்கள், கிராம ஊராட்சி சேவை மையங்கள், சுய உதவிக் குழுக் கட்டடங்கள் போன்ற சமுதாய உட்கட்டமைப்புகள் மற்றும் அரசு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பராமரிப்பதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அனுப்பியுள்ள கருத்துரு மற்றும் இது தொடர்பான வரைவு வழிகாட்டி நெறிமுறைகளை ஏற்கலாம் என அரசு முடிவு செய்து, அதன்படி, ஊரக பகுதிகளிலுள்ள அரசு பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், பொது சுகாதார மையங்கள் சமுதாய நலக் கூடங்கள், கிராம ஊராட்சி சேவை மையங்கள், சுய உதவிக் குழுக் கட்டடங்கள் போன்ற சமுதாய உட்கட்டமைப்புகள் மற்றும் அரசு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களை இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி பராமரிக்க வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்க அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக)

இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

N. Rajm... 21/8/2017
பிரிவு அலுவலர்.

இணைப்பு

அரசாணை (நிலை) எண். 93, ஊ.வ.(ம) ஊ. (மா.அதி-4) துறை, நாள் 21.08.2017

ஊரகப் பகுதிகளில் அரசு மற்றும் சமுதாய அமைப்பு கட்டடங்கள் மற்றும் வளாகங்களை, குறிப்பிட்ட கால இடைவெளியில் தூய்மையாகப் பராமரிப்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்:

1. அறிமுகம்

ஊரகப் பகுதிகளில் மருத்துவமனைகள், பள்ளிகள், பொது சுகாதார மையங்கள், அங்கன்வாடி மையங்கள், சமுதாய நலக் கூடங்கள், கிராம ஊராட்சி சேவை மையங்கள், சுயஉதவிக் குழுக் கட்டடங்கள் மற்றும் பல அரசு கட்டடங்களும், சமுதாய அமைப்புக் கட்டடங்களும் உருவாக்கப்பட்டு ஊரகப்பகுதி மக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றன. மேற்கண்ட கட்டடங்கள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள வளாகங்களை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பது மிகவும் அவசியமானதாகும்.

ஊரகப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்டுள்ள தூய்மைக் காவலர்களைக் கொண்டு செம்மையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் கிராமங்கள் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் நேர்த்தியான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி திடக்கழிவு மேலாண்மைப் பணிகளின் நோக்கங்கள் முழுமையான நிறைவேற வேண்டுமானால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசு மற்றும் சமுதாய அமைப்புக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் சுத்தம் செய்து பராமரிப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

2. தூய்மை பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்கள்

மேற்குறிப்பிட்டுள்ள தூய்மைப் பணிகளில் ஊராட்சி அமைப்புகள், அரசு / ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் இதர அரசு அமைப்புகளில் பணிபுரியும் சுகாதார பணியாளர்கள், மஸ்தூர்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தூய்மைக் காவலர்கள் ஆகியோர் ஈடுபடுத்தப்படுவர்.

3. தூய்மைப் பணியின் கால இடைவெளி

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களைக் கொண்டு மாதமொருமுறை கட்டாயம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையன்று அரசு மற்றும் சமுதாய அமைப்பு கட்டடங்கள் மற்றும் வளாகங்களில்

தூய்மைப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது மட்டுமல்லாது, ஊராட்சியில் அமைந்துள்ள அரசு மற்றும் சமுதாய அமைப்புக் கட்டடங்களின் எண்ணிக்கையினைப் பொருத்து தூய்மைப் பணிகளை தேவைப்படும் நேரங்களில் ஊராட்சி நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்.

4. செயலாக்கம் மற்றும் அறிக்கை

அரசு மற்றும் சமுதாய அமைப்புக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகளை ஊராட்சி நிர்வாகம் இதர துறைகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும்.

சம்மந்தப்பட்ட துறைகளின் மாவட்ட அளவிலான அலுவலர்கள் மற்றும் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஆகியோர் ஊரகப்பகுதிகளில் அமைந்துள்ள அரசு மற்றும் சமுதாய அமைப்புக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களில் மாதமொருமுறை மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகளைச் செயல்படுத்திட முழு பொறுப்பாக்கப்படுகிறார்கள்.

தூய்மைப் பணிகள் நடைபெறும் விவரத்தினை வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) மாதந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. கண்காணிப்பு

ஊராட்சி அளவில் ஊராட்சி மன்ற செயலாளர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், இதர துணை அலுவலர்கள் மற்றும் சமுதாய அமைப்புகளின் (PLF, VPRC, SHG) பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து அரசு மற்றும் சமுதாய அமைப்புக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகளைக் கண்காணிக்க வேண்டும்.

வட்டார அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சிகள்) தொடர்புடைய வட்டார அளவிலான இதர துறை தலைமை அலுவலர்களுடன் இணைந்து கண்காணிக்க வேண்டும். மேலும், ஊரக வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர் நிலையிலான வட்டார மண்டல அலுவலர்கள், அரசு மற்றும் சமுதாய அமைப்புக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களில் தூய்மைப் பணி நடைபெறும் நாளன்று கட்டாயம் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வளர்ச்சித் துறை அலுவலர்களின் மாதாந்திர ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் சுகாதாரத் துறை சார்பாக நடைபெறும் ஒருங்கிணைப்பு கூட்டங்களில் மேற்படி தூய்மை பணிகளின் விவரம் குறித்து கட்டாயம் விவாதிக்க வேண்டும்.

6. நிதி

ஊராட்சி அமைப்புகள், அரசு / ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், பொது சுகாதார மையங்கள், மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் இதர அரசு அமைப்புகளில் பணிபுரியும்

சுகாதார பணியாளர்கள், மஸ்தூர்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப்பணியாளர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தூய்மைக் காவலர்கள் ஆகியோர் இப்பணியில் ஈடுபடுத்தப்படுவதால், ஏற்கனவே உள்ள திட்டங்களிலுள்ள நிதியினைப் பயன்படுத்தி தூய்மைப் பணிகளை மேற்கொள்ளலாம்.

அரசு கூடுதல் தலைமைச் செயலர், மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளை இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களுடன் கலந்தாலோசித்து மாற்றம் செய்வதற்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

N. Rajan 21/8/2017
பிரிவு அலுவலர்